# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 210/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அருள்குமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. நடராஜன் | தொழில் | .. விவசாயம் |
| வயது | .. 51 | ஜாதி | .. கொங்குவேளாளர் |
| கிராமம் | .. கரியானூர் | நாள் | .. 24.03.2022 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்குமார் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

வா.சா.1 – அருள்குமார் - 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி.

பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாக்கல் செய்துள்ள விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியும். பொதுவாக கோவில் தர்மகர்த்தா இறந்துவிட்டால், அந்த கோவில் சம்மந்தப்பட்ட ஊர் பொதுமக்கள் ஒன்றுகூடி கோவில் தர்மகர்த்தாவை நியமனம் செய்வதற்காக பஞ்சாயத்து பேசி முடிவெடுப்பார்கள் என்று சொன்னால், சரிதான். நீங்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டீர்களா என்றால், அவ்வாறு நியமிக்கப்பட்டேன், அவ்வாறு நியமிக்கப்பட்டதற்கு எழுத்துப்பூர்வ முச்சலிக்கா ஏதேனும் ஏற்படுத்தப்பட்டதா என்றால், இல்லை. கோவிலை நீங்கள் தனிப்பட்ட முறையில் கட்டினீர்களா அல்லது ஊர் பொதுமக்களிடம் வரிவசூல் செய்து கட்டினீர்களா என்றால், ஊர் மக்களிடம் வரி வசூல் செய்துதான் கோவில் கட்டப்பட்டது. ஊர் மக்களிடமிருந்து வரி வசூல் செய்து கோவில் கட்டப்பட்டுள்ள நிலையில், நான் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்குமார்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.